## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

## C. C. No. 81-2025

| L.W.3 P.W.5 | | |
|---|---|---|
| Name: | தேவராஜன் (எ) தியாகராஜன் | Caste: |
| Father's Name: | ராசு (எ) செல்வராசு | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:38/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.05.2026 (எதிரி ஆஜர். )

**முன் விசாரணை:**

நான் தற்போது அகஸ்தியன்பள்ளி, பூவன்தோப்பில் குடியிருந்து உப்பளத்தில் லோடு மேனாக வேலை செய்து வருகிறேன். கடந்த 18.06.2023 அன்று மதியம் 02.30 மணியளவில் சாப்பிடுவதற்காக வீட்டிற்கு வந்தபோது, எனது தங்கை அ.சா.1-க்கும், ஆஜர் எதிரிக்கும் சண்டை நடந்ததாக கூறினார். எனது மைத்துனர் சிவாவை சுரேஷ் என்பவர் கட்டையால், தலையில் அடித்ததில் சிவாவிற்கு ரத்தம் வந்ததால், அவரை அழைத்துக் கொண்டு, வேதாரண்யம் அரசு மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் சிகிச்சைக்காக அழைத்துச் சென்றேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியளிக்காததால் அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள்படி இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154/ பிரிவு 157 BSA-ன் படி விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறது.

**அரசு தரப்பில் விசாரணை**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியுமா என்றால், தெரியும். எனது பக்கத்து வீட்டுக்காரர். அவரோடு பேசுவேனா என்றால், பேசுவேன். கடந்த 18.06.2023 அன்று மதியம் 02.30 மணியளவில், ஆஜர் எதிரிக்கும் அ.சா.1-க்கும் இடையே தகராறு நடந்ததாகவும், அதில் ஆஜர் எதிரி அ.சா.1-ஐ தகாத வார்த்தைகளில் திட்டியதாகவும், கட்டையால் ஆஜர் எதிரி சிவாவின் தலையில் அடித்து ரத்தக்காயத்தை ஏற்படுத்தியதாகவும், கொலை மிரட்டல் விடுத்ததையும் நான் நேரில் பார்த்ததாகவும், போலிசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது சம்பவத்தை கேள்விபட்டு தெரிந்து

கொண்டதாகவும், போலிசார் விசாரிக்கவில்லை என்றும், உண்மைக்கு மாறாக எதிரி எனது பக்கத்து வீட்டில் வசித்து வருபவர் என்பதாலும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. புகார்தாரரும், நானும், ஆஜர் எதிரியும் நெருங்கிய உறவினர்கள் என்றால் சரி.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..G. Sudha., 18.05.2026)**
**Dm-cum-Jm, Vedaranyam.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

In the Court of District Munsif-cum-Judicial  Magistrate Court, Vedaranyam.

**C. C. No. 81–2025**

| | | |
|---|---|---|
| L.W.7        P.W.6 | | |
| Name: | அன்பழகன் | Caste: |
| Father's Name: | மாரியப்பன் | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:46/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act  X of 1873 of the day of 18.05.2026
(எதிரி ஆஜர். )

**முன் விசாரணை:**

நான் தற்போது அகஸ்தியன்பள்ளி, பூவன்தோப்பில் குடியிருந்து உப்பளத்தில் உப்பு தயார் செய்யும் வேலை செய்து வருகிறேன். கடந்த 18.06.2023 அன்று சிவக்குமாருக்கும், அவரது மனைவிக்கும் சண்டை நடந்தது. அப்போது எனது அம்மா எனக்கு தொலைபேசியில் தகவல் கூறினார். நான் செல்வதற்குள் சிவக்குமாரை ஆஜர் எதிரி சுரேஷ் கட்டையால் அடித்ததால் தலையில் ரத்த காயம் ஏற்பட்டதாக எனது அம்மா மற்றும் சிவக்குமாரின் மனைவி தகவல் சொன்னார்கள். அதன்பிறகு சிவக்குமாரை அழைத்துக் கொண்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அதன் பிறகு 21.06.2023 அன்று போலிசார் சுரேஷை பிடித்து விட்டதாகவும், அவரிடமிருந்து கட்டையை கைப்பற்றவும் வேண்டி போலிசார் என்னை வரச்சொன்னார்கள். அதன் பின்னர், ஆஜர் எதிரி கட்டையை ஒப்படைத்தார். என்னுடன் செல்வராசு என்பவரும் வந்தார். **என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1–வது கையொப்பம் என்னுடையதுதான். அது அ.த.சா.ஆ2–ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1–வது கையொப்பம் என்னுடையதுதான். அது அ.த.சா.ஆ3–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னுடன் மற்றொரு சாட்சியாக பூவன்தோப்பை சேர்ந்த செல்வராசு என்பவரும் கையொப்பம் செய்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

காயம்பட்ட நபரான அ.சா.2 சிவக்குமார் எனது தம்பி என்றால் சரி. ஆஜர் எதிரி எனக்கு உறவினரா என்றால், நெருங்கிய உறவினர் அல்ல. ஒரே கிராமத்தை சேர்ந்த உறவினர். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால், உப்பளத்தில் வேலை செய்கிறேன். வேதாரண்யம் ராஜாஜி பூங்காவிற்கு எதற்காக வந்தேன் என்று, எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரி. எனது வாக்குமூலத்தில் எதிரி என்ன மரத்தாலான கட்டையால் சிவக்குமாரை தாக்கினார் என்று நான் சொல்லவில்லை என்றால் சரி. வேதாரண்யம் காவல் நிலையத்திலிருந்து, சம்பவ நடந்த இடத்திற்கு எவ்வளவு நேரத்தில் செல்லலாம் என்றால், அதிகபட்சமாக 15 நிமிடத்தில் செல்லலாம் என்றால் சரி. கட்டையை எங்கிருந்து கைப்பற்றினார்கள் என்று எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரி. கைப்பற்றுதல் மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில், காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரி.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..G. Sudha., 18.05.2026)**
**Dm-cum-Jm, Vedaranyam.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

**C. C. No. 81–2025**

| L.W.8 P.W.7 | | |
|---|---|---|
| Name: | செல்வராசு | Caste: |
| Father's Name: | சிங்காரவேலு | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:63/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.05.2026 (எதிரி ஆஜர். )

**முன் விசாரணை:**

நான் தற்போது அகஸ்தியன்பள்ளி, பூவன்தோப்பில் குடியிருந்து உப்பளத்தில் வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. 2 வருடங்களுக்கு முன்பு ஒருநாள், மதியம் 02.00– 02.30 மணியளவில் போலிசார் வந்து, ஆஜர் எதிரிக்கும், சிவா என்கிற சிவக்குமாருக்கும் நடந்த தகராறு பற்றி, விசாரித்து, ஆஜர் எதிரியின் வீட்டை காண்பிக்கச் சொல்லி கேட்டார்கள். ஆஜர் எதிரியிடம் போலிசார் கம்பை கேட்டார்கள். ஆஜர் எதிரி கம்பை போலிசாரிடம் ஒப்படைத்தார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பங்களில் என்னுடைய கையொப்பம் எதுவுமில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியளிக்காததால் அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள்படி இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154/ பிரிவு 157 BSA–ன் படி விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது எதிர் வீட்டில் வசித்து வருகிறார். கடந்த 21.06.2023 அன்று, காலை 11.00 மணிக்கு, நானும், அன்பழகன் என்பவரும், வேதாரண்யம் மேல வீதி, ராஜாஜி பூங்கா பஸ் ஸ்டாப் அருகில் நின்று கொண்டிருந்தபோது, அங்கு வந்த வேதாரண்யம் போலிசார் அங்கு நின்றிருந்த ஆஜர் எதிரியை சிவக்குமார் என்பவரிடம் தகராறு செய்து, கட்டையால் அடித்ததற்காக அவரை

விசாரித்துக் கொண்டிருந்ததாகவும், அவர் தாமாக எவ்வத தூண்டுதலும் இன்றி, ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கு தடயப்பொருளான கட்டையை எங்கள் இருவர் முன்னிலையில் கைப்பற்றியதாகவும், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலும் சாட்சியாக நான் கையொப்பம் செய்ததாக கூறிவிட்டு, தற்போது எதிரி பழக்கத்தில் இருந்து வருவதால், எதிரியை வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காக சங்கதிகளை முரணாகவும் கையொப்பம் இல்லை என்றும், போலிசார் விசாரணைக்கு மாறுபட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை—</u>

இல்லை.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..G. Sudha., 18.05.2026)**
**Dm-cum-Jm, Vedaranyam.**